கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி



## இணைய வார இதழ்

www.newwisdomministries.com

ஞானம் 6 – ஒலி 04 | 22-01-2023



## என்னைப் போல் ஒருவருமில்லை ஹை... சூப்பரோ சூப்பர்...



தலையங்கம்

அருட்பணி. சைமன் பீட்டர்

# கடவுள் ரொம்ப நல்லவர்ல்லம்மா?

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவரையும் இந்த வார ஞான ஒலி இதழின் வழியே சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடவுளின் எந்தப் படைப்பிலும் குறையேதும் இராது. காரணம் அதன் படைப்பாளி கடவுள். இந்த பிரபஞ்ச வெளியில் எத்தனை பால்வெளிகள் உள்ளனவோ, எத்தனை அண்ட சராசரங்கள் உள்ளனவோ அவற்றையெல்லாம் விட மிக மிக மிக உயர்ந்த ஆற்றல் பெற்றவர் நம் கடவுள். துவக்கமும் முடிவும் எதுவுமே அறியாதவர் அவர்.

குறையுள்ள மனமும், எண்ணமும் கொண்ட மனிதர்களின் பார்வையில்தான் குறைகள் அறியப்படுகின்றது. நிறைவை நிறைவாகக் கொடுத்தவர் அந்தப் பேரன்புக் கடவுள். நிறையையும் குறையாகப் பார்க்கும் மனதின் பேராசைக்கும், ஏக்கத்துக்கும் மருந்தே கிடையாது. அது மனிதனின் குறை.

இறைவனின் படைப்பில் ஓரறிவுயிர்க்கும், பெருவுயிர்க்கும் இங்கு சரிசமமான இடமுண்டு. அதனதன் சிறப்பு ஒப்புயர்வற்றது. இறைவன் எந்த உயிர்க்கும் உயர்ச்சியையும், தாழ்ச்சியையும் வைத்தவரல்ல. அனைத்தும் தனித்தன்மை வாய்ந்தது, ஒப்புயர்வற்றது. ஒவ்வொரு உயிரும் இந்த பிரபஞ்சத்தின் தவிர்க்க முடியாத பேருயிராகும், அந்தச் சிறு உயிரின்றி படைப்பு முழுமையடைவதில்லை.

சிறு புழுவைக்கூட யாராலும் இழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாத கடவுள், அதற்கு வேறு எந்த உயிரும் செய்ய முடியாத உயிரியக்கத்தைக் கொடுத்திருக்கின்றார். அந்த இறைவன் பெருங்கருணையுடையவர்.

ஒவ்வொரு உயிருக்கும் தனிச்சிறப்பு உண்டு. அந்த உயிரின் இயங்கும் ரசசியம் வேறு எந்த உயிரும் அறியாதது. ஓர் உயிர் செய்வதை வேறு எந்த உயிரும் செய்ய முடியாதது, பேரன்டத்தின் பெரும் ரகசியம் என்பதை நம் பெரும் பயத்தோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்தப் பிரமிப்புதான் இறைவன் மீது நாம் கொள்ளும் நம்பிக்கையின் ஆணிவேர்.

ஆட்டுக்கும் வாலை அளந்து வைத்தவர் இறைவன் என்பதை நாம் மறக்கக் கூடாது.

நான் ஏன் இங்கு, இந்த ஊரில் இந்தக் குடும்பத்தில் பிறந்தேன் என்று நாம் நினைக்கலாம். ஆனால், நாம் இவ்வாறு பிறந்திருப்பது இறைவனின் திட்டம். நமக்காக இறைவன் பரம ரகசியமாக வைத்திருக்கும் திட்டம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

திருவிவிலியம் கூறுகின்ற வார்த்தைகள் இதை வலியுறுத்திக் கூறுவதை இங்கு படிப்போம்.

என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள்
அல்ல.
உங்கள் வழிமுறைகள்
என் வழிமுறைகள் அல்ல
என்கிறார் ஆண்டவர். மண்ணுலகத்திலிருந்து
விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல,
உங்கள் வழிமுறைகளைவிட
என் வழிமுறைகளும்,
உங்கள் எண்ணங்களைவிட,
என் எண்ணங்களும்
மிக உயர்ந்திருக்கின்றன.
– எசாயா 55: 8, 9

ஒவ்வொரு உயிரும் தனிச்சிறப்புடன் வாழ இறைவன் கொடுத்திருக்கின்ற அருள் வரங்களே போதும் போதும் என்றளவிற்கு இருக்கின்றது. அவற்றை, அந்தப் பொக்கிஷத்தை முதலில் யார் கண்டுபிடிக்கின்றார்களோ, அவர்கள்தான் பாக்கியசாலிகள். அதன் பிறகு அவர்கள் எதற்கும் யாரையும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஒப்பற்ற செல்வமே நமக்கு நமக்குள் இருக்கும்போது, யாரை நாம் நம்பி வாழ வேண்டும். பிறரை வாழ வைப்பதே தன் கடமை என்றுணரும் அக்கணத்திலிருந்து செயல்பட ஆரம்பித்துவிடுவார்கள்.

அவர்களை நோக்கி அனைத்தும் பிரளயமாக வர ஆரம்பிக்கும். ஆனால் அதுவரை ஒவ்வொரு உயிரும் அதற்காக இறைவனால் தயார்படுத்தப்படும்போது, மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு தயாராக வேண்டும். அதுமட்டுமே அந்த உயிரிடமிருந்து இறைவன் எதிர்பார்க்கின்ற ஒன்றாகும்.

இதைப் புரிந்து கொண்டால் யாரும் தற்போதைய நிலையைக் குறித்து தர்க்கமும், வருத்தமும் படமாட்டார்கள்.

எந்த மனிதனும் யாரையும் போல இருக்க முடியாது. என்னதான் தாய் பிள்ளையானாலும், வாயும் வயிறும் வேற வேறத்தான் என்ற நம் முன்னோர்கள் எவ்வளவு பெரிய தத்துவத்தைக் கூறியிருக்கின்றார்கள்.

இப்போது நான் கூறப்போகும் ஒரு கதையை எல்லோருமே கேட்டிருப்பீர்கள். இருந்தாலும் இந்தக் கதையை நீங்கள் இதுவரை கேட்டதேயில்லை என்ற உணர்வோடு படியுங்கள். சரியா?

ஒருமுறை ஒரு சின்ன ஒட்டகக் குட்டி தன் தாய் ஒட்டகத்திடம் அம்மா நமது முதுகில் ஏன் இவ்வளவு பெரிய திமில் உள்ளது? என்று கேட்டது. அதற்கு அந்தத் தாய் ஒட்டகம், நாம் பாலைவனத்தில் வாழும் பிராணிகள். பாலைவனத்தில் வெகுதூரம் பயணிக்க வேண்டும். அச்சமயத்தில் பாலைநிலத்தில் எங்குமே தண்ணீரே கிடைக்காது. அகவே, பாலைவன பயணத்திற்கு முன் நாம் நிறைய தண்ணீரைக் குடித்து இந்தத் திமில்களில் சேமித்துக் கொள்வோம். அதன்பிறகு, பாலைவனத்தின் பயணத்தின் போது அந்தத் தண்ணீரை நாம் பயன்படுத்திக் கொள்வதற்காக இறைவன் இந்தத் திமிலோடு நம்மைப் படைத்திருக்கின்றார் என்றது.

அப்பிடியாமா, அப்ப சரி, நமக்கு ஏன்மா இவ்வளவு பெரிய நீண்ட கால்கள், அதோடு கால் பாதமும் இரண்டாகப் பிளந்து, பெரிதாக அகலமா உள்ளது? என்று அந்தக் குட்டி ஒட்டகம் கேட்டது. அதற்கு அந்தத் தாய் ஒட்டகம், அதுவும் நமது நன்மைக்காகத்தான். பாலைவனத்தில் நாம் வெகு தூரம் பயணிக்க, வேகமாக நடக்க இந்தப் பெரிய நீண்ட கால்கள் நமக்கு பேருதவி செய்யும். அதோடு நமது கால் பாதங்கள் அகன்று, பிரிந்து இருப்பதற்குக் காரணம் என்னன்னா?, நாம் பாலைவனத்தில் மணலில் நடக்க வேண்டி வரும். அப்போது நமது கால்கள் மணலுக்குள் புதைந்து போகதிருக்கும் என்றது. மேலும் அந்தக் சின்ன ஒட்டகம், அதுசரிதான் மா? நமது கண் இமைகள் ஏன் இவ்வளவு பெரிதாக நீண்ட நீண்ட முடிகளோடு இருக்கிறது? என்று கேட்டது. அதற்கு அந்த தாய் ஒட்டகம், அதுவும் கடவுள் நமக்குக் கொடுத்த பெரிய வரப்பிரசாதம். அதுவும் நமது நன்மைக்காகத்தான். நாம் பாலைவனத்தில் பயணம் செல்லும்போது, மணல் புயல்

அடிக்கும், தூசும், வெயிலும் கடுமையாக இருக்கும். அப்போதெல்லாம் நமது கண்களைக் காத்துக் கொள்ள அவை உதவும், அதோடு நமது கண்ணுக்கு மேலே ஒரு ஜவ்வு போன்ற திரையும் உண்டு அது நமது கண்கள் மேலே ஒரு படலம் போல் இருந்து நம்மை வெயிலிலிருந்தும், மணல் புயலிலிருந்தும் காத்து நாம் தொடரந்து பயணம் செய்ய உதவும் என்றது. அதற்கு அந்தக் குட்டி ஒட்டகம், ரொம்ப நன்றிமா, இதெல்லாம் நமக்கு மட்டுதான் இருக்குதா? என்றது. ஆமாப்பா, யாருக்கு எதைக் கொடுக்க வேண்டும் என்பதை கடவுளுக்கு நன்றாகத் தெரியும். பாலைவனத்தில் வாழும் ஒட்டகங்களாகிய நமக்கு மட்டும்தான் இப்படி உள்ளது. அதனால்தான் கடவுள் நமது பாலைவனப் பயணத்தில் நம்மைப் பாதுகாக்க இவற்றைக் கொடுத்துள்ளார் என்றதாம்.

அந்த ஒட்டகத்தின் சிறப்புக்கு ஈடானது அதேதான்.

நாம் நாம்தான். அவரவர் சிறப்பை வேறு யாரோடும் ஒப்பிடமுடியாது. அதுதான் படைப்பின் உன்னதம்.

நாம் தனித்தன்மை வாய்ந்தவர்கள். எல்லாப் புகழும் அந்த பரிசுத்த பரலோகத் தந்தைக்கே உரித்தாகுக. இறைவா போற்றி, போற்றி, போற்றி.

**WE ARE EACH GIFTED IN A UNIQUE AND IMPORTANT WAY. IT IS OUR PRIVILEGE AND OUR ADVENTURE TO DISCOVER OUR OWN SPECIAL LIGHT.**

**- MARY DUNBAR -**



# விவிலியம்

## அறிவோம்-74



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## குருக்களின் உடைகள் மற்றும் திருநிலைப்படுத்துதல் (விப 25–31)

சமயவழிபாட்டில் குருக்களின் பங்கு முக்கியமானது. திருநிலைப்படுத்தப்பட்ட குருக்கள் வழிபாட்டிற்குத் தலைமையேற்று நடத்துவது ஒரு சமயத்தின் வளர்ச்சியடைந்த நிலையைக் காட்டுவதாக உள்ளது. ஆரோனையும் அவரது வழிமரபினரையும் திருஉறைவிடத்தில் பணிபுரியத் தகுதியுள்ளவர்களாகக் கடவுள் தேர்ந்தெடுக்கிறார். எதிர்காலத்திலும் அவரது வழிமரபினரையே இஸ்ரயேலின் ;குருக்களாக நியமிக்கிறார். ஆரோனின் வழிமரபு லேவியர் குலத்தில் பிறந்த ஆரோனிலிருந்து தொடங்குகிறது. மக்களுக்காகப் பலி ஒப்புக்கொடுத்தல் மற்றும் முக்கியமான சமய விழாக்களைத் தலைமையேற்று நடத்துதல் போன்ற பணிகளை அவர்கள் செய்ததால் இஸ்ரயேல் குலங்களில் மற்ற குலங்களுக்கு இல்லாத சில தனிச் சிறப்புகளும் உரிமைகளும் கடமைகளும் குருக்களுக்கு இருந்தன. சிறப்பான உடைகளை அவர்கள் மட்டுமே அணிந்தனர். பலி பொருள்களில் அவர்களுக்கென ஒரு பங்கு ஒதுக்கப்பட்டது. அவர்கள் கடவுள் பணிக்கென தங்களை முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டுமென்பதால் இஸ்ரயேலில் அவர்களுக்கு சொத்துரிமை வழங்கப்படவில்லை. குருத்துவப் பணியில்லாமல் வேறு எந்தப் பணியையும் அவர்கள் செய்ய முடியாது. அவர்கள் கடவுளுக்கு முழுவதுமாக கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அவர்களின் கடமைகளைச் செய்யத் தவறினால் விரைவாகத் தண்டிக்கப்பட்டார்கள். மேலும் அவர்களின் வாழ்க்கை மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையவேண்டும்.

பண்டைய மேற்காசிய நாடுகளில் எல்லாக் காலாச்சாரங்களிலும் குருக்கள் இருந்தார்கள். பல சமூகங்களில் குருக்களின் வாரிசுகள் மட்டுமே குருக்களாகப் பணிசெய்தார்கள். எனவே சிறு வயதிலேயே அவர்கள் கோவில்களில் பயிற்றுவிக்கப்பட்டார்கள். சமூகத்தில் கல்வி கற்றவர்களாக இருந்த சிலருள் குருக்களும் அடங்குவர். எனவே முக்கியமான நிகழ்வுகளைப் பதிவுசெய்து பாதுகாக்கும் பணியும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கடவுளுக்கும் மக்களுக்கும் நடுநிலையாளர்களாக அவர்கள் செயல்பட்டார்கள். கடவுளின் விருப்பத்தை அறிந்து மக்களுக்கு அறிவித்தார்கள். இத்துடன் அவர்கள் கடவுளுக்குப் பலி ஒப்புக்கொடுக்கும் பணியையும் செய்தார்கள். இவைதான் குருக்களுக்கு ஆற்றலையும் அதிகாரத்தையும் கொடுத்தது. குருக்களில் சில படிநிலைகள் இருந்தன. தலைமைக்குரு ஒருவர் இருப்பார். சில நேரங்களில் அதிகாரத்தில் இவர் அரசருக்கு இணையானவராக இருப்பார். இடைநிலைக் குருக்கள் அன்றாடப் பணிகளைச் செய்பவர்களாக இருப்பார்கள். குறிப்பாக, வழிபாட்டுச் சடங்குகள், பலி ஒப்புக்கொடுத்தல், இசையமைத்தல் போன்ற பணிகளைச் செய்வார்கள். கீழ் நிலையில் உள்ள குருக்கள் கோவில் பணியாளர்களாக, கோவிலைச் சுத்தம் செய்தல், மற்றும் கோவிலுடன் தொடர்புடைய சிறு சிறு பணிகளைச் செய்பவர்களாக இருப்பார்கள். யாவேக் கடவுள் தனது திருஉறைவிடத்தில் குருத்துவப் பணி புரிவதற்காக ஆரோனையும் அவரது புதல்வர்களையும் தேர்ந்தெடுக்கிறார். எதிர்காலத்தில் ஆரோனின் வழிமரபினர் மட்டுமே குருத்துவத்

திருப்பணியைச் செய்ய வேண்டும் எனக் கட்டளையிடுகிறார். கடவுளுக்குமுன் குருத்துவத் திருப்பணி செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதற்குத் தகுதியான உடைகளை அணிவதும் அவசியம்.

குருக்களின் உடைகளைப் பற்றிக் கூறும்போது உன் சகோதரன் ஆரோனுக்காக மாண்பும், அழகும் பொருந்திய திருவுடைகள் செய்வாய் எனக் கடவுள் மோசேக்கு அறிவுறுத்துகிறார். குருக்களுக்கான உடைகள் மார்புப் பட்டை, ஏப்போது, அங்கி, உள்ளாடை, தலைப்பாகை, இடைக்கச்சை ஆகியவற்றை உள்ளடக்கியது. குருக்களுக்கான உடைகளில் மிகவும் முக்கியமானது ஏப்போது. இது உடம்பின் மேற்பகுதியை அதாவது இடுப்பிற்கு மேற்பட்ட பகுதியை மறைப்பதற்காக உருவாக்கப்படுகிறது. ஓரங்களில் இரண்டு தோள்பட்டைகளுடன் இணைக்கப்பட்டதாக, ஐந்து வண்ணங்களைக் கொண்ட மெல்லிய நார்ப்பட்டால் மிகுந்த வேலைப்பாட்டுடன் ஏப்போது தயாரிக்கப்பட வேண்டும் எனக் கடவுள் கட்டளையிடுகிறார். மேலும் இஸ்ரயேல் புதல்வர்களின் பெயர்கள் பொறிக்;கப்பட்ட இரண்டு மாணிக்கக் கற்கள் ஏப்போதில் பொருத்தப்படவேண்டும். இஸ்ரயேலின் பன்னிரு குலங்களின் பிரதிநிதியாக ஆரோன் கடவுளின் திருமுன்னிலையில் நிற்கிறார் என்பதை வெளிப்படுத்துவதற்காக இந்த மாணிக்கக் கற்கள் பொருத்தப்படுகின்றன. கலைநயத்துடன்,பல வண்ணங்களில் ஏப்போது தயாரிக்கப்படுவதிலிருந்து ஏப்போதின் சிறப்பை நாம் அறிந்து கொள்ளலாம். நீதித்தலைவர்கள் 17:5 மற்றும் 8:24-27ஆகிய பகுதிகளில் ஏப்போது சிலைவழிபாட்டுடன் தொடர்புபடுத்திக் காட்டப்படுகிறது. எனவே இது மெசிப்பெத்தோமியக் கலாச்சாரத்திலிருந்து வருகின்ற ஒன்றாக உள்ளது என அறிஞர்கள் கருதுகின்றனர்;. மார்புப்பட்டை தீர்ப்பு கூறுவதற்கான ஒரு கருவி. மார்புப்பட்டையில் கடவுளின் விருப்பத்தை அறிந்துகொள்ளப் பயன்படுத்தப்படும் கருவிகளான ஊரிம் மற்றும் தும்மிம் போட்டுவைக்கப்படும். ஊரிம் மற்றும் தும்மிம் எப்படியிருக்கும்? அவை எதனால் செய்யப்பட்டது? என்பதை அறிந்து கொள்வதற்கு விவிலியத்தில் எந்த குறிப்புகளும் இல்லை. இந்தப் பொருள்கள் மார்புப் பட்டையில் போட்டுவைக்கப்படும் எனக் கூறப்படுவதால் இவை ஏற்கனவே மக்கள் நடுவில் பழக்கத்தில் இருப்பவை என யூகிக்கலாம். மார்புப்பட்டையும் ஏப்போது போல கலைநயத்துடன், பல வண்ணங்களிலான நார்ப்பட்டுத் துணியினால் செய்யப்பட்டு பொன்னால் செய்யப்பட்ட வளையங்களால் ஏப்போதுடன் இணைக்கப்படும். மார்புப்பட்டையில் விலையுயர்ந்த பன்னிரு கற்கள் மூன்று மூன்று கற்களாக நான்கு வரிசைகள் பொருத்தப்படவேண்டும். ஒவ்வொரு கல்லிலும் இஸ்ரயேல் புதல்வர்களில் ஒருவரது பெயர் பொறிக்கப்படும். குரு மக்களின் பிரதிநிதி என்பதை அறிவிப்பதாக இந்தக் கற்கள் உள்ளன.

ஏப்போது, மார்புப்பட்டை ஆகியவற்றிற்கு அடுத்ததாக குரு அணிய வேண்டிய அங்கி பற்றிக் கூறப்படுகிறது. அங்கி ஏப்போதிற்கு கீழ் அணியக்கூடியது. அது நீல நிறத்தில் அமைந்திருக்க வேண்டும். அங்கி கிழியாமல் இருப்பதற்காக தலை நுழைய ஒரு திறப்பும் நெசவு வேலைப்பாடுள்ள ஒரு கரையும் அமைந்திருக்கவேண்டும். அங்கியின் விளிம்புகள் முழுவதும்; மாதுளைத் தொங்கலும் பொன்மணிகளும் பொருத்தப்பட்டிருக்கவேண்டும். இவை நீலம், கருஞ்சிவப்பு, சிவப்பு ஆகிய மூன்று நிறங்களாலான மெல்லிய நார்ப்பட்டுடன் பொருத்தப்பட்டிருக்கவேண்டும். மாதுளைப் பழங்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டின் செழுமையைக் குறிக்கும் அடையாளங்களாகக் கருதப்பட்டன. அங்கியுடன் இணைக்கப்படுகின்ற பொன்மணிகள் தலைமைக்குரு பணியில் இருக்கும்போது அவரது அசைவுகளைக் குறிப்பதற்காக உள்ளன. தலைமைக்குரு கடவுளின் திருமுன்னிலையில் பணியில் உள்ளார் என்பதை மக்களுக்குக் கூறுவதற்காகவும் இந்தப் பொன்மணிகள் பொருத்தப்படுகின்றன. மேலும் பசும் பொன்னால் ஒருபட்டம் செய்து அதில் ஆண்டவருக்கு அர்ப்பணம் என்று பொறித்து தலைப்பாகையில் தொங்கவிட வேண்டும். தலைமைக்குருதான் வழிபாடுகளை நடத்துவதற்குப் பொறுப்பானவர்; அதிகாரம் கொண்டவர். இந்தப் பட்டம் குருவின் அதிகாரத்தை வெளிப்படுத்தும் ஒன்றாகஉள்ளது. இது ஓர் அரசனின் அதிகாரத்தை வெளிப்படுத்த அவன் அணிந்திருக்கும் கீரீடத்திற்கு ஒப்பானது எனக் கூறலாம். மேலும் உள்ளங்கி, தலைப்பாகை, இடைக்கச்சை, பிறந்தமேனி மறைவதற்காக கால்சட்டை ஆகியவை மெல்லிய நார்ப்பட்டால் செய்யப்படவேண்டும். ஆரோனுக்காகச் செய்யப்படும் திருஉடைகள் அவரது இறப்பிற்குப் பிறகு அவரது வாரிசாக தலைமைக் குருவாக வருகிறவருக்குக் கொடுக்கப்படும். ஆரோன் இறந்தபோது மோசே அதைச் செய்கிறார். அவருடைய உடைகள் அனைத்தையும் உரிந்து அவரது மகனான எலயாசருக்கு உடுத்துகிறார். எலயாசரைத் தலைமைக் குருவாக நியமிக்கிறார்.

குருக்களின் உடைகள் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்று கூறிய கடவுள் அதைத் தொடர்ந்து ஆரோனையும் அவரது புதல்வர்களையும் கடவுளுக்குப் பணிபுரியும் குருக்களாகத் திருநிலைப்படுத்தும்

சடங்குபற்றி விவரிக்கிறார். மோசே திருநிலைப்படுத்தும் குருவாகச் செயல்படுகிறார். இந்தத் திருநிலைப்படுத்தும் நிகழ்வு ஏழு நாள்களுக்குத் தொடருகின்ற ஒரு நிகழ்வாக சித்தரிக்கப்படுகிறது. ஏனெனில் இதில் ஆரோனும் அவரது வழிமரபினரும் குருக்களாகத் திருநிலைப்படுத்தும் சடங்கு மட்டுமல்ல மேலும் திருஉறைவிடம், பலிபீடம் ஆகியவை எப்படிப் பயன்படுத்தப்படவேண்டும்? திருஉறைவிடத்தின் எல்லைக்குள் என்னென்ன பலிகள் செலுத்தப்பட வேண்டும்? குருக்களுக்கான பணிகள் என்னென்ன? குருக்களின் உரிமைகள் ஆகிய அனைத்தும் ஒவ்வொன்றாக விளக்கப்படுகின்றன. ஆரோனையும் அவரது புதல்வர்களையும் திருநிலைப்படுத்துமுன் திருநிலைப்படுத்தும் வழிபாட்டிற்காகவும், திருஉறைவிடம், பலிபீடம் மற்றும் குருக்களைப் புனிதப்படுத்துவதற்காகவும் ஓர் இளங்காளை, இரு செம்மறிக் கிடாய்கள், கோதுமை மாவினால் செய்யப்பட்ட புளிப்பற்ற அப்பம், எண்ணெயில் பிசைந்த புளிப்பற்ற நெய்யப்பம், எண்ணெய் தோய்ந்த புளிப்பற்ற மெல்லிய அடைகள் ஆகியவற்றையும் தயாராக வைத்திருக்கக் கடவுள் கட்டளையிடுகின்றார். இவையனைத்தும் நாட்டின் செழுமையை பிரதிபலிக்கின்றன. மேலும் அவை மக்கள் கடவுளிடமிருந்து பெற்ற கொடைகளாகவும் பார்க்கப்படுகின்றன. கோதுமையும், எண்ணெயும் பண்டைய இஸ்ரயேலின் முக்கிய விளைபொருள்கள். அவற்றை இணைத்து பலிப்பொருளுக்கான அப்பத்தைச் செய்வதன் வழியாக நாட்டில் செழுமையைத் தந்துமக்களைப் பராமரிக்கும் பணியை கடவுள் செய்கிறார் என்பதை அறிக்கையிடுவதாகவும் உள்ளது.

திருநிலைப்படுத்தப்படுமுன் ஆரோனும் அவரது புதல்வர்களும் தங்கள் உடல்களைக் கழுவித் தூய்மைப்படுத்தப்படுகிறார்கள். திருஉடைகளை அணிவதற்கு உடம்பைத் தூய்மைப்படுத்துவது அவசியம். அதன்பின் குருக்களுக்கான அனைத்துத திருஉடைகளும் ஆரோனுக்கு அணியப்படுகின்றன. குருக்களுக்கான அனைத்து ஆடைகளும் அணிந்தவராக நிற்கும் ஆரோன் திருப்பொழிவு எண்ணெயால் அருள்பொழிவு செய்யப்படுகிறார். இங்கே ஆரோன் மட்டுமே திருப்பொழிவு எண்ணெயால் அருள்பொழிவு செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் விப 30:30 மற்றும் 40:15 ஆகிய இடங்களில் ஆரோனும் அவரது மகன்களும் திருப்பொழிவு எண்ணெய் தலையில் ஊற்றப்பட்டு அருள்பொழிவு செய்யப்படுதாக கூறப்படுகிறது. பிற்காலத்தில் அரசர்கள் தலையில் திருப்பொழிவு எண்ணெய் ஊற்றப்பட்டு அருள்பொழிவு செய்யப்பட்டார்கள். திருப்பொழிவு எண்ணெயால் அருள்பொழிவு செய்யப்படுதல் குருக்கள்; கடவுளால் மக்களுக்காக கொடுக்கப்படும் கொடைகள் என்பதைக் கூறுவதாக உள்ளது. இஸ்ரயேல் மக்கள் நடுவில் அருள்பொழிவு செய்யப்படுதல் தேர்வு செய்யப்படுவதன் அடையாளமாகவும் அமைந்திருந்தது.

திருநிலைப்படுத்தும் சடங்குகளில் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் ஒரு பொருள் இரத்தம். இரத்தம் உயிரின் அடையாளமாக உள்ளது. எனவே இரத்தம் பலிபீடத்தின் மேலும் குருக்களின் உடைகள் மீதும் தெளிக்கப்படுகின்றது. இவ்வாறு பலிபீடத்தின் மேலும் குருக்களின் மேலும் இரத்தம் தெளிக்கப்படுவது இரண்டுஉண்மைகளைக் கூறுவதாக உள்ளது. முதலாவது, குருக்கள் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையில் நடுநிலையாளர்களாகச் செயல்படுபவர்கள் என்பதைக் குறிக்கிறது. இரண்டாவது, பலிபீடம் எவ்வாறு கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளதோ அதைப்போல குருக்களும் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்பதைக் காட்டுகிறது. பலிப்பொருள்கள். குறிப்பாக கோதுமை, அப்பம், எண்ணெய் மற்றும் விலங்குகள் கொண்டுவரப்பட்டு அவை பலிபீடத்தில் சுட்டெரிக்கப்படுகின்றன. இவ்வாறு திருஉறைவிடம் மற்றும் பலிபீடம் ஆகியவை புனிதப்படுத்தப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படுகின்றன. சமயப் பணிகளுக்காக மட்டுமே குருக்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு நிலத்தில் பங்குகொடுக்கப்படவில்லை. பலியிடுவதற்காக கொண்டுவரப்படும் பொருள்களில் ஒரு பகுதி அவர்களுக்கு உரித்தானது. எல்லாவிதமான பலிகளுக்கும் ஒப்புக்கொடுக்கப்படும் விலங்குகளின் இறைச்சியில் சில பகுதிகள் குருக்களுக்காக ஒதுக்கிவைக்கப்படும். அதைக் குருக்கள் மட்டுமே உண்ணவேண்டும். வேறு எவரும் உண்ணலாகாது. அவர்களால் உண்ண முடியவில்லையென்றால் அவை எரிக்கப்படவேண்டும்.

பயணம் தொடரும்...



மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ஜஸ்டின் சேவியர் ராஜ்**

M.A.(Phil)., M.A.(Phil.lic).,M.A.(Chris).,Dip Pas Coun, M.Sc (Psy)., MBA., MPhil., Phd.

பங்குத்தந்தை

**பங்குத்தந்தை, திருக்குடும்ப ஆலயம்**

பெருந்துறை, கோயமுத்தூர்

பொதுக்காலம்
34-ஆம் ஞாயிறு
22-01-2023

முதல் வாசகம்
**எசாயா 9:1-4**

இரண்டாம் வாசகம்
**1 கொரிந்தியர் 1:10-13,17**

நற்செய்தி வாசகம்
**மத்தேயு 4:12-23**

# ஞாயிறு மறையுரை

## EXTRA – எக்ஸ்ட்ரா

இறை இயேசுவில் அன்பிற்குரிய அவர்களே சூஃபி கதைகளில் ஒன்று இவ்வாறு சொல்கிறது. எகிப்திய பாலைவனத்தில் ஒருவர் வசித்து வந்தார். அவரிடம் வந்த ஒருவர் தான் கடுமையான விரதங்களை மேற்கொண்டு உடலை புனிதமாக வைத்திருப்பதாகவும், ஆனால் தன் மனதின் எண்ணங்களை அப்படி தம்மால் அடக்க முடியவில்லை என்றும் கூறினார். ஞானி கூறினார்: உடலின் புலன் உணர்வுகளை அடக்கி ஒடுக்குவது என்பது வேறு; அவற்றிலிருந்து விடுபடுவது என்பது வேறு. படிக்கும்படி ஒரு சிறுவனை அடித்து துன்புறுத்தினால் அவன் படிப்பையே வெறுக்க ஆரம்பித்து விடுவான். மனதின் இச்சைகளை பலவந்தமாக அடக்கும்போது நீ மனதின் எதிரி ஆகிறாய். எதை நீ மறுக்கிறாயோ அதையே மனம் நாட ஆரம்பித்து விடும். சூஃபிகளின் பாதை காட்டுவது இதுதான். ஒன்றை வேண்டும் என விரும்புவது எப்படி ஒரு விதமான ஆசையோ, அதனை தேவையில்லை என்று பிடிவாதமாக மறுப்பதும் ஒருவிதமான ஆசைதான். ஆனால் இது எதிர்மறையான ஆசை. மெல்ல மெல்ல இவற்றில் இருந்து விடுபடுவது தான் மேலான நிலையாகும். அந்த ஞானி அவரிடம் புலன்களிடமிருந்து விடுபடும் வழிவகைகளை பற்றி விளக்கினார். அதையெல்லாம் கேட்டுக் கொண்டு சென்ற அந்த மனிதர் சில நாட்கள் சென்ற பின்னர் மீண்டும் வந்தார். நீங்கள் சொன்னவற்றில் பலதை நான் மறந்து போய்விட்டேன் என்றார். ஞானி அவரிடம் விளக்கமாக திரும்பவும் எல்லாவற்றையும் கூறி அனுப்பினார். சிறிது காலம் கழித்து மீண்டும் வந்த அவர் தான் இப்போதும் அதில் சிலவற்றை மறந்து விட்டதாக சொன்னார். மீண்டும் ஞானி அனைத்தையும் விரிவாக சொன்னார். ஐயா நான் உங்களுக்கு ஒரு தொந்தரவாக தெரியவில்லையா? என்று வந்தவர் கேட்டார். ஞானி அங்கிருந்த எரியும் விளக்கை எடுத்து மற்ற விளக்குகளை ஏற்றுமாறு கூறினார். அதன்படி நாலைந்து விளக்குகளை ஏற்றினார். வந்தவர் இப்போது இந்த முதல் விளக்கிலிருந்து நெருப்பை எடுத்து மற்ற விளக்குகளை ஏற்றியதால் இந்த விளக்குக்கு ஏதாவது நஷ்டம் உண்டா? என்று கேட்டார் ஞானி. இல்லை என்றார் வந்தவர். அதேதான் நீங்களோ, மற்றவர்களோ எத்தனை முறை என்னை நாடி வந்தாலும் அதனால் எனக்கு எந்த நஷ்டமும் இல்லை. அதனால் தயங்காமல் எத்தனை தடவை வேண்டுமானாலும் வாருங்கள் என்றார் அவர் அன்புடன்.

இயற்கை என்பது எதையும் வேதப்படுத்தி அல்லது பிரிவினை படுத்தி பார்ப்பதே இல்லை. கடலில் பொழியும் அதே மழை தான் தரையிலும் பொழிகிறது. காட்டில் காயும் அதே நிலவு தான் நாட்டிலும் காய்கிறது. மலைகளில் வீசும் அதை காற்று தான் சமவெளியிலும் வீசுகிறது. வடகோடி முதல் தென்கோடி வரை சூரியனின் கதிர்கள் ஒரே மாதிரி தான் பரவுகின்றன.

இறை இயேசுவின் பிரியமானவர்களே இன்றைய வார இறை வார்த்தை இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மையோடு வாழ அழைப்பு விடுக்கின்றன. புனிதர்கள் நம்மை போலவே மனிதர்கள் தான் ஆனால் அவர்கள் கொஞ்சம் **Extra** (எக்ஸ்ட்ரா) செய்தவர்கள் வரவு செலவு பார்க்காமல் அன்பை ஊதாரித்தனமாக அனைவருக்கும் வழங்கினார்கள். இசையாஸ் இறைவாக்கினர் இன்றைய முதல் வாசகத்தில் இறைவன் **Extra**-வாக பின் தங்கிய நாடுகளை நேசித்ததை எடுத்துரைக்கிறார் புனித சின்னப்பர். **Extra**-வாக அனைவரையும் பொதுவாக நேசிப்பதை இன்றைய இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கிறது. இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மையுடன் வாழ இயேசு தன் முதல் நான்கு சீடர்களை அழைப்பதை இன்றைய நற்செய்தி வாசகம் எடுத்துரைக்கிறது. நாமும் **Extra**-வாக அனைவரையும் அன்பு செய்வோம் **Extra** மனிதர்களை மன்னிப்போம் மண்ணகத்தில் விண்ணகத்தை சுவைப்போம்.

*– ஆமென்*



# பொதுக்காலத்தின் 3-ஆம் ஞாயிறு

எசா 9:1-4, 1 கொரி. 1:10-13, 17, மத். 4:12-23

**22-01-2023**

## திருப்பலி முன்னுரை




பா. சேவியர்
திண்டுக்கல்


பாவ அடிமைத்தனம் எனும் இருளிலிருந்து விடுபட்டு, மகிழ்ச்சி, மன்னிப்பு எனும் பேரொளியில் சங்கமிக்க வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 3-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

எரியும் புதரிலே தோன்றி மோசேயை அழைத்த இறைவன் வீசும் காற்றின் வழியாக எலியாவை அழைத்த ஈசன். இடி மின்னல் ஒளியில் பவுலை அழைத்த பரமன். இறைத் தூதரின் வழியாக கன்னி மரியாவை அழைத்த ஆண்டவன் இத்திருப்பலி வழியாக நம்மையும் அழைக்கிறார்.

மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கிவிட்டது என்ற சிந்தனையை நம் நெஞ்சங்களில் விதைத்து, இருளிலிருந்து ஒளி நிறைந்த வாழ்வுக்கும், பாவ வாழ்விலிருந்து புண்ணிய வாழ்வுக்கும், நிழல் உலகிலிருந்து நிலை வாழ்வுக்கும் நம்மை அழைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

பிரிவினைச் சிந்தனைகளும் பிளவு மனப்பான்மைகளும் அதிகமாயிருக்கும் இன்றைய காலகட்டத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒற்றுமையின் கருவிகளாக செயல்படவும் வாழவும் அழைக்கப்படுகிறோம்.

ஒவ்வொரு பெண்ணும் கணவனையும் பிள்ளைகளையும் புரிந்துகொண்டு நல்ல மனைவியாக, அன்பான அன்னையாக வாழவும், ஒவ்வொரு ஆணும் மனைவியை உளமாற அன்பு செய்யும் நல்ல கணவனாக, பிள்ளைகளுக்கு நல்ல முன் மாதிரியான சிறந்த தகப்பனாக வாழவும், இயேசுவைப்போல் சிறுவயது முதல் தனது பெற்றோருக்கும் கடவுளுக்கும் கீழ்படிந்து அனைவரையும் மதித்து வாழும் நல்ல பிள்ளைகளாக ஒவ்வொரு சிறுவரும் வாழவும் வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

அசீரியப் படையெடுப்பால் பாபிலோனி யாவுக்குக் கடத்தப்பட்டு விடுதலைக்காக ஏங்கித் தவித்த இஸ்ரயேல் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் ஆண்டவரின் நாள் பற்றிய எசாயாவின் இறைவாக்கு இன்றைய முதல் வாசகமாக அருளப் பட்டுள்ளது. பொய்மையிலிருந்து மெய் மைக்கும், இருளினின்று ஒளியினுக்கும், சாவினின்று வாழ்விற்கும் அழைத்துச் செல்லும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கொரிந்து நகரத் திருஅவையில் ஒற்றுமையும், நல்லுறவும் சிதைந்து பிளவுபட்டுக் கிடந்த மக்களை மீண்டும் ஒன்றுபடுத்த, தூய பவுலடிகள் அவர் களுக்கு எழுதிய முதல் திருமுகத்தின் ஒரு பகுதியே இன்றைய இரண்டாம் வாசகம். நம்மிடமுள்ள பிரிவினைகள், பிளவுகள் முதலியவற்றை களைந்து, கிறிஸ்து இயேசுவுக்குள் ஒருமனப்பட்டு வாழ வேண்டும் என்று அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்டு கருத்தில் கொண்டு வாழ்வோம்.

## மன்றாட்டுகள்

1. அன்புத் தந்தையே எம் இறைவா, விண்ணரசை நிறுவுவதற்காக, உமது அழைப்பை ஏற்று, தங்களையே அர்ப்பணித்து அரும்பணி ஆற்றிவரும் உம் திருஅவையின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். மனித மனங் களை ஒருங்கிணைத்து அவர்களை உண்மை வாழ்வின் மையத்திற்கு அழைத்துவரும் அவர்களது நற்பணி தொய்வின்றி தொடரவும், அவர்கள் உடல நலத்துடனும், ஆன்மீக பலத்துட னும் வாழவும், அருள் தர வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

2. விண்ணகத் தந்தையே இறைவா, பாவத்தை உணர்ந்து அதிலிருந்து விடுதலை பெறுவதுதான் உண்மை யான மனமாற்றம் என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து, பாவங்களை விட்டு விலகி, விடுதலை அடைந்து, ஒரு மனப்பட்டவராய் வாழவும், அதன் வழியாய் உம் திருவருளை நிறைவாகப் பெற்று விண்ணரசை உரிமையாக்கி மகிழவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. என்றும் மாறாத தத்துவமான அன்பு இறைவா, எங்கள் பங்கில் உள்ள இளைஞர்களை உம் அருட்கரங்களில் ஒப்படைக்கின்றோம். அவர்கள் தோல்வியைக் கண்டு துவண்டு போகாமலும், வெற்றியில் முழுமையாக புதைந்து போகாமலும் நிதானத்துடனும் நம்பிக்கையுடனும் வாழக்கூடிய மனப் பக்குவத்தையும், ஒளிமயமான நல்ல எதிர்காலத்தையும் அவர்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பும் கருணையும் நிறைந்த இறைவா, மதச் சார்பற்ற நாடு என்றும், வேற்றுமையில் ஒற்றுமை என்ற உயர்ந்த பண்பாடு கொண்ட தேசம் என்றும், உலக நாடுகளால் போற்றப் படுகின்ற எமது இந்திய திருநாட்டையும், நாட்டை ஆள்வோரையும் நிறைவாக ஆசீர்வதியும். நாட்டை ஆளுகின்ற தலைவர்கள் நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும், நல்லிணக்கத் திற்கும் பாதகம் ஏற்படுத்தாதவாறு நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்ய அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.




# இந்திய குடியரசு தின திருப்பலி

எரே 31:31–34, 1 தீமோ. 2:1–6, யோவா. 8:31–36

**26-01-2023**

## திருப்பலி முன்னுரை



பா. சேவியர்
திண்டுக்கல்

இயேசுவில் அன்புக்குரிய இறை மக்களே உங்கள் அனைவருக்கும் குடியரசு தின வாழ்த்துக்களைக் கூறி, இன்றைய வழிபாட்டிற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறேன்.

என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன், அதை அவர்களது இதயத்தில் எழுதி வைப்பேன் என்ற இறை வார்த்தைக்கிணங்க டாக்டர் அம்பேத்கர் போன்ற மாபெரும் அறிஞர் பெருமக்கள் வகுத்து தந்த, உலகமே வியந்து பாராட்டும் அரசியல் அமைப்பு சட்டங்களுடன் 1950ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26–ஆம் நாளில் இந்தியா தன்னை ஒரு குடியரசு நாடாக பிரகடனப்படுத்தியது. சரித்திர பிரசித்தி பெற்ற அந்த நன்னாளை குடியரசு தினமாக ஆண்டு தோறும் நாம் கொண்டாடி வருகிறோம்.

மக்களுக்காக மக்களால் மக்கள் அரசு என்ற தத்துவத்தை அடிநாதமாகக் கொண்ட இக்குடியரசு நாளில் ஏழை எளியவர்களுக்காக, நாட்டுத் தலைவர்களுக்காக, துன்புறுவோருக்காக நாம் செபிக்க வேண்டும் என்ற அழைப்பினை விடுக்கிறது இன்றைய வழிபாடு.

கடவுளையும் மனிதரையும் இணைத்த அதே இயேசு கிறிஸ்து மனிதரையும் மனிதரையும் இணைக்கிறார் என்ற இன்றைய வார்த்தை வழிபாடு சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

ஆட்சியிலிருப்போர் தங்களது அதிகாரம் கடவுளிடமிருந்து வருகிறது. தாங்கள் கடவுளுக்கும், அவரது பிள்ளைகளான நாட்டு மக்களுக்கும் கடமைப்பட்டவர்கள் என்பதை உணர வேண்டும். இதுவே குடியரசு என்பதற்கான அடையாளம். இதையே இன்றைய வழிபாடும் உணர்த்துகிறது.

மக்கள் மத்தியிலும், மக்களை வழி நடத்தும் தலைவர்கள் மனங்களிலும் வேற்றுமை, வேறுபாடுகள், பாகுபாடுகள் அகன்று அனைவரும் ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும் வாழுகின்ற மனப்பக்குவத்தை பெற்று வாழவும், நாடு வளம் பெறவும், நாட்டு மக்கள் நலம் பெறவும் தேவையான வரங்களை அருளுமாறு இத்திருப்பலி வழியாக இறைவனை மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

புதிய உடன்படிக்கை பற்றி எரேமியா எழுதியதை குடியரசு தினமாகிய இன்று முதல் வாசகமாக திருஅவை நமக்கு வழங்கியுள்ளது. கடவுள் உறவும் மக்கள் உறவும் இணையும் போதுதான் ஒரு ஆட்சி வளம் பெறும் என்பதை இவ்வாசகம் விளக்குகிறது. இறைவனை ஏற்று நடக்கும் அரசுதான் உண்மையான அரசு என்பதை உணர்த்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அனைவரையும் மீட்பவர் கடவுளே, அனைவரையும் இணைப்பவர் கடவுளே. அனைவரின் இணைப்புக்காகவும், நல்வாழ்வுக்காகவும், மீட்புக்காகவும் நாமும் இறைவனோடு இணைந்து உழைக்க வேண்டும். அதற்காக செபிக்க வேண்டும் என்று இன்றைய இரண்டாம் வாசகம் நம்மை அழைக்கிறது. மக்கள் நல்வாழ்வுக்காக நம்மை அர்ப்பணிக்க அழைக்கும் இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவி மடுப்போம்.



# திருக்குறள் வழங்கும்
# சமூக நெறிச் சிந்தனைகள்


சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM




## குறள் –29

**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயுங் காத்தல் அரிது**

### குறள் விளக்கம்

நல்ல பண்புகளாகிய மலையின் மேல் ஏறி நின்ற பெரியோர். ஒரு கணப்பொழுதே சினம் கொள்வார். ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

### சிந்தனை

கருவானத்தில் பளிச்சிடும் நிலவே நம்மை ஈர்க்கும்: அதுபோல் வெள்ளைத் தாளில் வைக்கப்பட்ட கரும்புள்ளி அதிக ஈர்ப்புத் தன்மை உடையது. இங்கு கரும்புள்ளி என்பது குறைகளைக் குறிக்கிறது. சிறு கரும்புள்ளி எவ்வாறு வெள்ளைத்தாளை மறைத்து விடுகிறதோ அது போல் சிறு குறைகள் அனைத்து நற்குணங்களையும் மறைத்துவிடும். அது பளிங்கு சிலையில் பூசப்பட்டு வெயிலில் உருகும் மெழுகுகள் சிலையின் தரத்தை குறைப்பதற்கு சமமாகும்.

ரோம சாம்ராஜ்யத்தில், பளிங்குச் சிலைகள் வைத்திருப்பது அந்தஸ்தின் அடையாளம். பேராசை பிடித்த சிற்பிகள், தரமற்ற பளிங்கில் சிலைகள் செய்தனர் உடைசல், விரிசல்களை மறைக்க பளிங்கில் ஆங்காங்கே மெழுகைப் பூசினர். வெய்யில் காலத்தில் மெழுகுகள் உருகத் தொடங்கின.

குறைகளைப் பூசி மெழுகுதல் என்ற வழக்கு கூட இதன் மூலம் வந்திருக்கலாம். நம் வாழ்க்கைகூட பளிங்குச் சிலைகள் போலத்தான். குறைகளை செப்பனிடாமல் பூசி மெழுகத் தொடங்கினால், வேண்டாத இடத்தில் வெளிப்படக் கூடும். பலவீனங்களை சீர் செய்பவர்கள் நல்ல பளிங்குச் சிலைபோல் விலைமதிப்பற்ற வெற்றிகளை எட்டுகிறார்கள்.

கடவுளின் ஞானத்தினால் படைக்கப்பட்ட காயீன் ‘சினம்’ என்ற துர்குணத்தால் ஞானத்தை இழந்து பாவத்தில் விழுந்தான் என்கிறது சாலமோனின் ஞானம். நீதியற்ற ஒருவன் தன் சினத்தினால் ஞானத்தை விட்டு அகன்றான். சீற்றத்தினால் தன் உடன் பிறப்பைக் கொன்றதால் அவனும் அழியலானான் – சாஞா 10:3

எங்கும் எதிலும் பொறுமையோடு இருந்தால் சினம் ஆறும் என்கிறது நீதி மொழிகள். அறிவில்லாதவர் தம் சினத்தை அடக்க மாட்டார்: ஞானமுள்ளவரோ பொறுமையோடிருப்பதால், அவர் சினம் ஆறும் – நீமொ 29:11

சினத்தால் வரும் அழிவு பெரியது. எனவே கோபத்தை சில நொடிகள் தள்ளிப் போட பழகுவோம் என்கிறார் ப்ரியன்.

மனம் கொண்ட சினம் தன்னையும் உடைத்து வீட்டையும் சில்லாக்கும் எனில் அர்த்தமற்ற அச்சினம் எதற்கு? கடந்து செல் அதனை நிதானத்துடன் சிறு புன்னகையுடன்–ப்ரியன்

தீய குணங்களை அடக்க நினைத்தால் அடங்காது: அறிய நினைத்தால் அடங்கிவிடும். எனவே, தீய குணங்களான சினம், பிடிவாதம், அகங்காரம் போன்றவற்றின் காரணம் அறிய முற்படுவோம். அவற்றை முற்றிலும் தவிர்த்து வாழப் பழகிடுவோம்.



சகோதரி. ரோசி. **காங்கேயம்**
புனித காணிக்கை அன்னை சபை

# சமூகமும்... சட்டமும்...

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CRPC) பிரிவு 498 (A) - ன் படி, வரதட்சணை கொடுமைபிணையில் விடமுடியாத, பிடியாணையின்றி கைது செய்யக் கூடிய, மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கக்கூடிய குற்றமாகும்.

இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 113ன் படி, திருமணம் ஆகி ஏழாண்டுகளுக்குள் ஒரு பெண் இறந்தால், அப்பெண்ணின் இறப்பிற்குமுன் கணவனோ, கணவனின் உறவினர்களோ வரதட்சணை கேட்டதாக நிரூபிக்கப்பட்டால், அப்பெண் வரதட்சணை கொடுமையால் இறந்ததாகக் கருதப்படும்.

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 8ன் படி, வரதட்சணைக் குற்றமானது, பிணையில் விடமுடியாத குற்றமாகும். மேலும், வரதட்சணைக் குற்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர், தான் குற்றம் இழைக்கவில்லை என்பதை நிரூபிக்கவேண்டும்.

நீண்டகாலமாக வரதட்சணை கொடுப்பது என்பது இந்திய தண்டனைச் சட்டம் 1961 பிரிவு 304B மற்றும் 498 ஆகியவற்றின்படி தண்டனைக்குரிய செயலாக பார்க்கப்படுகிறது. வரதட்சணைதடைச் சட்டம் வரதட்சணை என்பதனை பின்வருமாறு வரையறை செய்கிறது. வரதட்சணை என்பது நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ திருமணத்திற்காக ஒரு தரப்பில் இருந்து மற்றொரு தரப்பிற்கு, இரு வீட்டார்களது பெற்றோர்களோ அல்லது அவர்களது குடும்பத்தினரோ எந்தவொரு சொத்து அல்லது மதிப்புமிக்க பொருட்களைக் கொடுக்கவோ அல்லது கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்படுவதோ ஆகும்.

வரதட்சணைத் தடைச் சட்டம், 1961 ன் பிரிவு 3 ஆனது எந்தவித நிபந்தனையும் இல்லாதபோது திருமணத்தின்போது ஒரு தரப்பினர் மற்றொரு தரப்பினருக்கு வரதட்ணையானது கொடுக்கவோ அல்லது பெறப்பட்டாலோ அத்தகைய சமயங்களில் மணமகன் அல்லது மணமகள்மீது இந்தத் தண்டனைச் சட்டம் பொருந்தாது எனக் குறிப்பிடுகிறது

வரதட்சணைக்கு எதிரான இந்திய சட்டங்கள் பல தசாப்தங்களாக நடைமுறையில் இருந்தாலும், அவை பயனற்றவையாகவே உள்ளது என்று பரவலாக விமர்சிக்கப்படுகின்றன. வரதட்சணை காரணத்தினால் பல பகுதிகளில் நடைபெறும் கொலைகள், இந்தச் சட்டம் விமர்சனத்திற்கு உள்ளாவதற்கான முக்கியமான காரணமாகப் பார்க்கப்படுகிறது.

வரதட்சணைக் கொடுமை குறித்து மனைவி புகார் செய்தால்,மணமகன் மற்றும் அவரது குடும்பத்தினர் உடனடியாக கைது செய்யப்படவேண்டும் என்று இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498 ஏ குறிப்பிடுகிறது. இந்தச் சட்டம் பரவலாக துர்பிரயோகம் செய்யப்பட்டது, மேலும் 2014 ல், உச்சநீதிமன்றம் இந்தப் புகார்கள் மீது ஒரு குற்றவியல் நடுவர் அனுமதியின்றி கைது செய்யமுடியாது என்று தீர்ப்பளித்தது.

## வரதட்சணைத் தடை அலுவலர்கள்

மாழல அரசு தேவையென கருதக்கூடிய எண்ணிக்கையில் வரதட்சணைத் தடை அலுவலர்களை நியமிக்கலாம். இவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் வரதட்சணைத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவர். மாநிலஅரசும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விதிகளை வகுக்கலாம்.



## திருப்பலி வாசகங்கள்
# பொதுக்காலம் 3–ஆம் வாரம்

**22.01.2023 முதல் 29.01.2023**

**22.01.2023 – பொதுக்காலம் 3–ஆம் வாரம் ஞாயிறு**
முதல் வாசகம் : எசாயா 9:1–4
இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 1:10–13, 17
நற்செய்தி : மத்தேயு 4:12–23

**23.01.2023 – திங்கள் கிழமை**
முதல் வாசகம் : எபிரேயர் 9:15, 24–28
நற்செய்தி : மாற்கு 3:22–30

**24.01.2023 – செவ்வாய் கிழமை**
முதல் வாசகம் : எபிரேயர் 10:1–10
நற்செய்தி : மாற்கு 3:31–35

**25.01.2023 – புதன் கிழமை**
முதல் வாசகம் : தி.பணி. 22:3–16 (அ) தி.பணி. 9:1–22
நற்செய்தி : மாற்கு 16:15–18

**26.01.2023 – வியாழக்கிழமை**
***இந்தியக் குடியரசுத் திருவிழா***
முதல் வாசகம் : 2 திமொத்தேயு 1:1–8 (அ) தீத்து 1:1–5
இரண்டாம் வாசகம் : மாற்கு 4:21–25

**27.01.2023 – வெள்ளிக்கிழமை**
முதல் வாசகம் : எபிரேயர் 10:32–39
நற்செய்தி : மாற்கு 4:26–34

**28.01.2023 – சனிக்கிழமை**
முதல் வாசகம் : எபிரேயர் 11:1–2, 8–19
நற்செய்தி : மாற்கு 4:35–41

**29.01.2023 – ஞாயிறு**
***பொதுக்காலம் 4ஆம் வாரம்***
முதல் வாசகம் : செப்பினியா 2:3 – 3:12–13
இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 1:26–31
நற்செய்தி : மத்தேயு 5:1–12அ



We shall never know all the good that a simple smile can do.

- St. Mother Teresa -

# நலம் தரும்
# இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

உறவுகளே இனிய வணக்கம். இன்றைய நலக்கல்வி..!

## அடிவயிற்று கொழுப்பை கரைத்து விரட்டும் ஒரு துளி சாறு.... மிளகுடன் பருகினால்...

நாம் ஆரோக்கியமாக இருக்க உடல் எடையை கட்டுப்பாட்டான முறையில் வைத்திருக்க வேண்டும். முக்கியமாக வயிற்றில் இருக்கும் கொழுப்பை கரைப்பது என்பது நிறைய பேருக்கு சிக்கலான காரியம்.

கொழுப்பை கரைக்க விரும்புபவர்கள் சில இயற்கையான பானங்களை அருந்துவது பயனளிக்கும். எலுமிச்சை சாற்றை தினமும் எடுத்து கொள்வதால் எப்படி கொழுப்பு கரையும் என்பது குறித்து பார்க்கலாம்.

எலுமிச்சையில் நிறைய மருத்துவ குணங்கள் உள்ளது. எலுமிச்சையில் விட்டமின்-சி ஏராளமான விட்டமின்கள் தாதுப் பொருட்களுடன் பாலிஃபீனால்கள் டானின்கள் உள்ளிட்ட பல்வேறு தாவர வேதிப்பொருளும் உள்ளன.

எலுமிச்சையில் உள்ள பெக்டின் என்னும் கரையக்கூடிய நார்ச்சத்து உடல் எடையை குறைத்து வயிற்றில் இருக்கும் கொழுப்பை கரைக்க உதவும்.

காலை உணவுக்கு முன் வெறும் வயிற்றில் எலுமிச்சை நீரை நீங்கள் பருகி வரலாம்.

எலுமிச்சை சாற்றில் பாக்டீரியா எதிர்ப்பு, பூஞ்சை எதிர்ப்பு, ஆன்டி டயாபெட்டிக், புற்றுநோய் எதிர்ப்பு பண்புகள், ஆன்டி வைரல் போன்ற பண்புகள் உள்ளன.

இது கொழுப்பை எரிக்க உதவுகிறது. பசியை அடக்குகிறது. கொழுப்பு செல்கள் உள்ளுறுப்பில் இருக்கும் கொழுப்பை கரைக்க உங்களை தூண்டும். அது மட்டும் இல்லாமல் உங்கள் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் ஆன்டி பாக்டீரியல் தன்மையை அதிகரிக்கவும் உதவுகிறது.

1 டம்ளர் தண்ணீர் உடன் 1-4 பங்கு எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து கொள்ளுங்கள். அதனுடன் சுவைக்கு 1 டீ ஸ்பூன் தேன் அல்லது இஞ்சி சேர்த்து கலந்து கொள்ளுங்கள். மிளகும் சேர்த்து பருகலாம்....

ஒரு டம்ளர் எலுமிச்சை சாறு ஒரு ஸ்பூன் மிளகுத்தூள் சேர்த்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வர எடை குறையும்.

குறிப்பாக இதைக் குடித்து ஒரு மணி நேரம் கழித்து தான் வேறு எந்த உணவையும் உண்ணுதல் வேண்டும். இந்த பானத்தைக் குடித்து ஒரு மணி நேரம் வரை வேறு எதுவும் சாப்பிடக் கூடாது. குறிப்பாக காபி, டீ கையிலேயே தொடக் கூடாது. மிளகில் உள்ள கேப்சைசின் உடலின் மெட்டபாலிசத்தைத் தூண்டி, கொழுப்பு செல்களைக் கரைக்கும்.

நலமுடன் வாழ்வை தொடங்க நாளும் இதை கடைபிடித்து வந்தால்... நலமுடனும், வளமுடனும், வாழலாம்.



நன்றி உறவுகளே... என்றும் உங்கள் அன்பு சகோதரன்

**ஜே. அன்புரோஸ்**
நலநெறியாளன்
தொடர்பு எண் : **9360456063**